பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

27 09 2024 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. மத்திய அரசின் அனைத்து துறைகளுக்குமான நாடாளுமன்ற நிலைக்குழுக்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.
2. தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடியை நேரில் சந்தித்து தமிழக திட்டங்களுக்கான நிதியை விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.
3. ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைக்கு மூன்றாவது மற்றும் இறுதிக்கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.
4. சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக திரு ஸ்ரீராம் கல்பாத்தி ராஜேந்திரன் இன்று பதவியேற்றார்.
5. கான்பூரில் இன்று தொடங்கிய இந்தியா-வுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பங்ளாதேஷ் முதலில் பேட் செய்து வருகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மத்திய அரசின் அனைத்து துறைகளுக்குமான நாடாளுமன்ற நிலைக்குழுக்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நிதித்துறைக்கு பிஜேபி-யின் **Bhartru hari mahtab** பதலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

காங்கிர்ஸ் கட்சியின் திரு சசிதரூர் வெளியுறவுத்துறைக்கும், முன்னாள் மத்திய அமைச்சர் திரு ராதாமோகன் சிங் பாதுகாப்புத்துறை நிலைக்குழுவுக்கும் தலைமை பொறுப்பை வகிப்பார்கள்.

திமுக-வின் திரு திருச்சி சிவா தொழில் துறைக்கும், திருமதி கனிமொழி நுகர்வோர் விவகாரங்கள் துறை நிலைக்குழுவுக்கும் தலைமைப் பொறுப்பை வகிக்கின்றனர்.

திரிணமூல் காங்கிரஸின் திரு தோலாசென் வர்த்தகத்துறை நிலைக்குழுவுக்கு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி பங்கேற்கும் 114-வது மன்-கி-பாத் நிகழ்ச்சி வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பாகவுள்ளது.

திரு நரேந்திமோடி மோடி மூன்றாவது முறையாக பிரதமராக பதவியேற்றபின் ஒலிபரப்பாகும் நான்காவது நிகழ்ச்சி இதுவாகும்.

அகில இந்திய வானொலியின் அனைத்து அலைவரிசைகள், தூர்தர்ஷன் அலைவரிசைகளிலும் இந்நிகழ்ச்சி ஒலிபரப்பாகிறது.

ஏ ஐ ஆர் நியூஸ் இணையதளம், நியூஸ் ஆன் ஏர் செல்போன் செயலி மற்றும் யூ-டியூப் சேனல்களிலும் பிரதமரின் பங்குபெறும்

மன்-கி-பாத் நிகழ்ச்சி ஒலிபரப்பாகிறது.

**[]<<<>>>[]**

புதுதில்லி சென்றுள்ள தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், பிரதமர் திரு நரேந்திர மோடியை இன்று காலை சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின்போது சென்னை இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கு மத்திய அரசின் பங்கான ஏழாயிரத்து 425 கோடி ரூபாயை உடனடியாக விடுவிக்குமாறு முதலமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் அடிக்கடி தாக்குதலுக்கு உள்ளாவதாகவும், இதனை நிரந்தரமாக தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

ஒருங்கிணைந்த கல்வி திட்டத்தின் கீழ் தமிழகத்திற்கான கல்வி நிதியை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் திரு மு க ஸ்டாலின், பிரதமரை கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக திரு ஸ்ரீராம் கல்பாத்தி ராஜேந்திரன் இன்று பதவியேற்றுக் கொண்டார்.

சென்னை ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி அவருக்கு பதவிபிரமாணம் செய்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் குடியரசுத்தலைவர் திரு ராம்நாத்கோவிந்த் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

நீதிபதி திரு ஸ்ரீராம் கல்பாத்தி, மும்பை உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக பொறுப்பு வகித்து வந்தார்.

**[]<<<>>>[]**

தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை மத்திய அரசு அதிகரித்துள்ளது.

அமைப்புசாரா துறையில் உள்ள தொழிலாளர்களுக்கு மாறும் அகவிலைப்படியை திருத்துவதன் மூலம் இந்த குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்தியுள்ளது.

இதன் மூலம் கட்டுமான தொழிலாளர்கள், சுமை தூக்கும் தொழிலாளர்கள், தூய்மைப் பணியாளர்கள், வீட்டுப் பராமரிப்பில் ஈடுபடுவோர், சுரங்கம் மற்றும் வேளாண் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பயனடைவார்கள்.

இந்தப் புதிய ஊதிய விகிதங்கள் வரும் அக்டோபர் மாதம் முதல் நடைமுறைக்கு வரும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

மத்திய அரசின் ஒரே நாடு – ஒரே தேர்தல் திட்டத்திற்கு பலதரப்பு மக்களும் தங்களது ஆதரவை தெரிவித்து வருகின்றனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள மக்கள் நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தப்பட்டால் தேர்தல் நடத்துவதற்கான செலவும், பிரச்சாரத்திற்கான செலவும் கணிசமாக குறையும் என்று கருத்து தெரிவித்துள்ளனர்.

*( சவுண்ட்பைட் - மக்கள் ) ---70 செகண்ட்*

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீரில் சட்டப்பேரவைக்கு மூன்றாவது மற்றும் இறுதிக்கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும், வேட்பாளர்களும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அடுத்த மாதம் ஒன்றாம் தேதி 40 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது.

100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையில் மக்களிடையே விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

**[]<<<>>>[]**

தமிழ் இதழியலில் முன்னோடிகளில் ஒருவராக விளங்கியவரும், முன்னாள் சட்டப்பேரவைத் தலைவராகவும் சேவை புரிந்த சி பா ஆதித்தனாரின் பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் சமூக வலைதளத்தில் புகழாரம் சூட்டியுள்ளார்.

சி பா ஆதித்தனார் ஆற்றிய நற்பணிகளை இந்நாளில் நினைவு கூர்வோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை எழும்பூரில் அமைந்துள்ள சி பா ஆதித்தனாரின் சிலைக்கு மாநில அமைச்சர்கள் திரு சேகர்பாபு, திரு மா சுப்ரமணியன், திருமதி கீதாஜீவன் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் இதுவரை 80 கோடிக்கும் மேல் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இம்மாதம் 25-ஆம் தேதி இந்த இலக்கு எட்டப்பட்டதாக தெரிவித்துள்ளது.

அனைத்து அரசு அமைப்புகள், உள்ளூர் சமூக ஆர்வலர் அமைப்புகள் மற்றும் பல்வேறு தரப்பு மக்களும் இந்த இயக்கத்தில் ஆர்வமுடன் பங்கேற்று ஒத்துழைப்பு அளித்து வருவதாக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் லட்டு பிரசாதத்தில் கலப்படம் செய்யப்பட்டதாகக் கூறப்படும் புகார் குறித்து புலன் விசாரணை மேற்கொள்ள ஐ பி எஸ் அதிகாரி திரு **Sarva Shreshth** தலைமையில் ஒன்பது உறுப்பினர் கொண்ட சிறப்பு புலனாய்வு பிரிவை ஆந்திர பிரதேச அரசு அமைத்துள்ளது,

**[]<<<>>>[]**

உலக சுற்றுலா தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி சுற்றுலா மற்றும் அமைதி என்ற கருப்பொருளில் மத்திய சுற்றுலா அமைச்சகம் புதுதில்லியில் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது.

இந்நாளையொட்டி தமிழகத்தில் உள்ள சுற்றுலா தலங்களிலும் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

**[]<<<>>>[]**

ஜம்மு-வில் கடந்த ஜூன் மாதம் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதல் குறித்து தேசிய புலனாய்வு அமைப்பினர் சம்பவம் நடந்த இடங்களில் விசாரணையை இன்று தொடங்கியுள்ளனர்.

ரியாஸி மாவட்டத்தில் உள்ள சிவ்கோரி கோவிலுக்குச் சென்ற பக்தர்கள் மீது தீவிரவாதிகள் என சந்தேகிக்கப்படுவோர் இந்த தாக்குதலை நடத்தியுள்ளனர்.

புலனாய்வு பிரிவினர் பல்வேறு பிரிவுகளாக சென்று ரஜோரி மற்றும் ரியாஸி மாவட்டங்களில் விசாரணை மேற்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

அமெரிக்காவின் கலிஃபோர்னியா மாகாணத்தில் உள்ள ஸ்ரீ சுவாமி நாராயண் கோவில் கடந்த 24-ஆம் தேதி சில விஷமிகளால் சேதப்படுத்தப்பட்டதற்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

சான்பிரான்சிஸ்கோவில் உள்ள இந்திய தூதரகம் இது குறித்து உள்ளூர் அதிகாரிகளிடம் புகார் தெரிவித்துள்ளது.

உடனடியாக நடவடிக்கை எடுத்து இதற்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து தெரிவித்த கோவில் நிர்வாகத்தினர், கோவிலில் உள்ள கலைப் பொருட்கள் சேதப்படுத்தப்பட்டதுடன், வெறுப்புணர்வை தூண்டும் வகையில் வாசகங்களும் கோவில் சுவர்களில் எழுதப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

**[]<<<>>>[]**

இலங்கையில் மின்னணு பயண அங்கீகாரத்தின் மூலம் விசா பெறும் நடைமுறையை மீண்டும் அந்நாட்டு அரசு கொண்டு வந்துள்ளது.

அனைத்து வெளிநாட்டவரும் இத்திட்டத்தின் கீழ் சுற்றுலா விசாக்களை பெறும் வகையில் நடைமுறை எளிமையாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

இந்தியா-வுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்து வரும் பங்ளாதேஷ் அணி சற்று முன் வரை 2 விக்கெட் இழப்புக்கு -74 ரன் எடுத்துள்ளது.

கான்பூரில் இன்று தொடங்கிய இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இரண்டு போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் முதல் போட்டியில் இந்தியா வெற்றிபெற்று முன்னிலையில் உள்ளது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் அணி — கோவாவை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.